செ.வெ.எண். 231 நாள்: 21.08.2019

## செய்திக்குறிப்பு

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைதிட்டம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களின் அறிவிப்பு

தமிழக அரசின் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களது கல்வித்தகுதியினை பதிவு செய்து 5 ஆண்டுகள் நிறைவு பெற்ற, பத்தாம் வகுப்பு தோல்வி அடைந்தவர்களுக்கு ரூ.200/– , 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.300/– , 12ஆம் வகுப்பு தேர்ச்சி / பட்டயப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.400/–மற்றும் பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.600/– வீதம் மாதந்தோறும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற, விண்ணப்பதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/– என்பது நடைமுறையில் உள்ளது. தற்போது அரசாணை நிலை எண். 127 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்.2) துறை, நாள் 25.07.2019 ன்படி, பயனாளியின் தாய், தந்தை அல்லது கணவன் அல்லது மனைவி ஆகியோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.72,000/– (ரூபாய் எழுபத்திரெண்டாயிரம்) மாக உயர்த்தப்பட்டு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்திற்கான ஆண்டு வருமான உச்ச வரம்பினை உயர்த்தி அறிவித்துள்ளார்கள். மேலும் இதனை நடப்பு காலாண்டு ( 01.07.2019 முதல் 30.09.2019 வரை) முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே உதவித்தொகைப் பெற விருப்பம் உள்ள பதிவுதாரர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இலவசமாக வழங்கப்படும் விண்ணப்பத்தினைப் பெற்று அதில் வருவாய் அலுவலர் அளவில் பெறப்படும் சான்றில் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.72,000/– க்கு மிகாமல் பெற்று பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது. இவ் உதவித்தொகை பெறுவதால் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பெறப்படும் பரிந்துரைகள் ஏதும் பாதிக்கப்படமாட்டாது. என காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.